# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 821/2016

ஆணை எண். 008/2017

&நாள் : 11/01/2017

திரு பிரேம்குமார்,
செனாய் நகர், சென்னை–30.

-- முறையீட்டு மனுதாரர்

திரு முத்துரவிச்சந்திரன்,
துப்புரவு மேற்பார்வையாளர்,
திருமதி பி.சித்ரா, உதவியாளர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–30.
திரு குமரேசன், மொழிபெயர்ப்பாளர்,
சென்னை மாநகராட்சி, சென்னை – 3.

-- எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, செனாய் நகர், ஹாரிங்டன் சாலை, 10–வது அவின்யூ, எண்.4/15 & 4/16–ல் வசிக்கும் திரு பிரேம்குமார் அவர்களது 04.08.2016 நாளிட்ட முறையீட்டுமனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.08.2016 அன்று பெறப்பட்டு 821/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, செனாய் நகர், ஹாரிங்டன் சாலை, 10–வது அவின்யூ, எண்.4/15 & 4/16–ல் வசிக்கும் திரு பிரேம்குமார் அவர்கள், தான் சென்னை மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராக 25.10.1978 அன்று பணிநியமனம் செய்யப்பட்டு, 25.11.1988ம் அன்று அப்பணி உறுதி படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். 1988–ஆம் ஆண்டில் தனக்கு ஏற்பட்ட மனஅழுத்தம் மற்றும் உடல்நலக் கோளாறு காரணமாக பணிக்குச் செல்லாத காரணத்தினால் சென்னை மாநகராட்சி, 8–வது மண்டலத்தில் வெளியிடப்பட்ட ஆணை எண். மா.ந. 8. ந.க A7/ 001/99–ல் தான் பணியிலிருந்து நீக்கம் செய்யப் பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மனஅழுத்தம் மற்றும் உடல்நலக் கோளாறு காரணமாக தன்மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித விளக்கத்தினையும் தன்னால் அளிக்க இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பணிநீக்கம் செய்யப்பட்டபின், மாநகராட்சி பணியில் மீண்டும் பணியமர்த்தம் பெறும்பொருட்டு,

2009–ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி , 70 மற்றும் 72 கோட்டங்களில் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றிய திரு. முத்து இரவிச்சந்திரன் அவர்களின் உதவியைக் கோரியதாகவும் அதற்கு அவர் ரூ.1,50,000/– வழங்கினால் மேற்படி பணியினை மீண்டும் பெற்றுத்தருவதாக உறுதியளித்ததால் 09.09.2009, 20.08.2011, 15.12.2011 மற்றும் 10.03.2012 ஆகிய நாட்களில் முறையே ரூ.50,000/–, 30,000/–,20,000/– மற்றும் ரூ.50,000/– ஆக மொத்தம் ரூ.1,50,000/–ஐ திருமதி சித்ரா அவர்கள் மூலமாக வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேற்படி தொகையினைப் பெற்றுக்கொண்ட திரு முத்துரவிச்சந்திரன் மற்றும் திருமதி சித்ரா ஆகியோர் பணியினை மீண்டும் பெற்றுத்தராததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 26.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, 1988–ம் ஆண்டு தனது பணி நியமனம் உறுதிபடுத்தப்பட்டதென்றும், மனநிலை சரியில்லாத காரணத்தினால் தன்னால் பணிக்குச் செல்ல இயலவில்லை என்றும் தெரிவித்தார். உடல்நிலை சரியானபின், திரு முத்துரவிச்சந்திரன் அவர்களை சந்தித்தபோது, அவர் கேட்டுக்கொண்டதின்பேரில் பணிநீக்கம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களை அவரிடம் வழங்கியதாகவும், இழந்த வேலையை வாங்கித் தருவதாக சத்தியம் செய்ததுடன் 09.09.2009 அன்று ஒன்பது பத்திரங்களில் தன்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார் எனவும் விசாரணையின்போது தெரிவித்தார். திரு முத்துரவிசந்திரன் அவர்களிடம் நான்கு தவணைகளில் மொத்தம் ரூ.1,50,000/– வழங்கியபின்பும், இதுநாள்வரையும் தனக்கு வேலை மற்றும் வழங்கிய பணமும் திரும்பக் கிடைக்கவில்லை என்று விசாரணையின்போது தெரிவித்தார்.

3. குற்றஞ்சாட்டப்பட்ட எதிர்மனுதாரர்களில் ஒருவரான திரு முத்து ரவிச்சந்திரன் அவர்களிடம் 11.11.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 2007–ம் ஆண்டில் தான் துப்புரவு ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று புதிய மண்டலம் – 8ல் பணியாற்றியபோது அதே மண்டலத்தில் முறையீட்டு மனுதாரரின் சகோதரர் திரு ஏசுபாதம் அவர்கள் தன்கீழ் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றினார் என்று தெரிவித்தார். திரு ஏசுபாதம் அவர்கள் தனக்கு ஒதுக்கப்பட்டப் பணியிடத்தில் முறையாக பணியில் இருப்பதில்லை என்றும் அவருக்குப் பதிலாக அவரது மூத்த சகோதரரும் முறையீட்டு மனுதாரருமான திரு பிரேம்குமார் என்பவரே பணியிலிருப்பார் என்றும், இதனைக் கண்டித்த தனக்கும், தன்கீழ் பணியாற்றிய துப்புரவுப் பணியாளர் திரு ஏசுபாதத்திற்குமிடையே பிரச்சினைகள் ஏற்பட்டன என்றும், திரு பிரேம்குமார் தன்மீது அபாண்டமான பொய்ப்புகார்களைத் தெரிவித்து மனு செய்வதற்கு திரு ஏசுபாதம் அவர்களின் காழ்ப்புணர்ச்சியும், தூண்டுதலுமே காரணமாக இருந்துள்ளது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மற்றொரு எதிர் மனுதாரரான திருமதி சித்ரா அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. திரு ஏசுபாதம் அவர்களது பணி ஒழுங்கீனம் குறித்து திருமதி சித்ரா அவர்களும் விசாரணையின்போது உறுதி படுத்தினார். மேலும், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரர் தனது குமாரர்களிடம் ரூ.1,50,000/– பெற்று திருமதி சித்ரா மூலமாக திரு முத்துரவிச்சந்திரன் அவர்களுக்கு வழங்கியதாக மனுவில் தெரிவித்துள்ளார். விசாரணையின்போது, காழ்ப்புணர்ச்சியின் காரணமமாக திரு ஏசுபாதம் அவர்களின் தூண்தலின்பேரில் தாங்கள் மீது பொய்யான புகார்கள் புனையப்பட்டுள்ளன என்று திரு முத்துரவிச்சந்திரன் மற்றும் திருமதி சித்ரா ஆகிய இருவரும் தெரிவித்துள்ளனர். முறையீட்டு மனுதாரர் தன்னை மாநகராட்சிப் பணியிலிருந்து நீக்கம் செய்ததற்காக சட்டரீதியான நடவடிக்கையை பின்பற்றாமல் சட்டத்திற்கு புறம்பான வழியில் இழந்த பணியினை மீளப்

பெறுவதற்கு முயற்சித்துள்ளார். சட்டத்திற்குப் புறம்பான முறையீட்டு மனுதாரரின் செயலும் ஏற்புடையதல்ல. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரருக்கு ரூ.1,50,000/– வழங்கியதை அவரது குமாரர்களிடம் உறுதிபடுத்துவதற்கும் மற்றும் அவரது சகோதரர் திரு ஏசுபாதம் அவர்களிடம் விசாரணை மேற்கொள்வதற்கும் விசாரணைக்கான அழைப்பாணை மனுதாரர் மூலமாக அனுப்பப்பட்டது. விசாரணைக்குரிய நாளில் ஆஜராகாமல் முறையீட்டு மனுதாரர் தனது 27.09.2016 நாளிட்ட கடிதத்தில் தன்னிடம் மேற்கொள்ளப்பட்டது விசாரணை அல்லவென்றும் அது அக்கிரமம் என்றும் சட்டவிரோதமாக வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதென்று குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரரான திரு முத்துரவிச்சந்திரனிடம், மனுதாரர் கையூட்டு வழங்கியதற்கு சரியான ஆதாரங்களோ அல்லது சாட்சியங்களோ இல்லை. மனுதாரர் சார்பாக அவரது குற்றச்சாட்டை உறுதிசெய்திட அவரது குமாரர்கள் மற்றும் சகோதரர் ஆகியோர் விசாரணைக்கு வருகை தந்து சாட்சியமளிக்கவும் முன்வரவில்லை. திருமதி பி. சித்ராவும் மனுதாரர் கூற்றை உறுதிப்படுத்தவில்லை. இந்நிலையில் போதிய ஆதாரங்களுடன் அல்லது சாட்சியங்களுடன் குற்றச்சாட்டினை உறுதிப்படுத்தாத நிலையில் மனுதாரரின் முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், இம்முறைமன்ற நடுவத்தின் மாண்பமைக்கும், இறையான்மைக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில், கற்பனையில் தான்தோன்றித்தனமாக கருத்து தெரிவித்தற்காக முறையீட்டு மனுதாரரையும் அதற்கு உடந்தையாக இருந்த அவரது உடனாளரான மனு எழுத்தரையும் இம்முறைமன்ற நடுவம் எச்சரிக்கிறது. கைரேகை மட்டும் வைக்கத் தெரிந்த மனுதாரரை, யாரோ ஒரு நபர் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் தான் விரும்புவதை எல்லாம் மனுதாரரை ஏமாற்றும் நோக்குடன் கற்பனையாகக் குறிப்பிடுவதை ஏற்பதற்கில்லை. மேலும், இச்செயல் மிகுந்த கண்டனத்துக்குரியதுமாகும்.

2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

12.1.17

12/1/17

பெறுநர்

திரு பிரேம்குமார்,
எண்.4/15 & 4/16, 10–வது அவின்யூ,
ஹாரிங்டன் சாலை,செனாய் நகர்,
சென்னை – 600 030.

திரு. முத்து ரவிச்சந்திரன், மேற்பார்வையாளர்,
திருமதி. சித்ரா, இளநிலை உதவியாளர்,
அண்ணா நகர் மண்டலம் (மண்டலம் –8).
எண்.36பி, இரண்டாவது குறுக்குத் தெரு,
புல்லா அவின்யு, ஷெனாய் நகர், சென்னை–30.

நகல்

மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.